# “சமூக வானொலிகளை பலப்படுத்துதல்” என்ற தலைப்பில் ஏப்ரல் 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில், யுனெஸ்கோ, புதுடெல்லியில் நடத்திய தேசிய கலந்துரையாடல் நிகழ்வின் பரிந்துரைகள்

இந்தியாவில் சமூக வானொலிகளை பலப்படுத்துதல் என்ற கருத்தை மையமாகக் கொண்டு, சமூக ஊடகங்களுக்கான யுனெஸ்கோ இருக்கையும் யுனெஸ்கோவின் புதுதில்லி அலுவலகமும் இணைந்து கடந்த ஏப்ரல் 11 மற்றும் 12 தேதிகளில் தேசிய அளவிலான கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது.

மேற்கூறிய கருத்தரங்கில், அனைவரையும் உள்ளடக்கிய சமூக வானொலி, சமூக வானொலிக்கான திறன் மேம்பாடு, நிலைப்புத்தன்மை, தொழில்நுட்பம், ஆராய்ச்சி, ஆவணப்படுத்துதல் மற்றும் கொள்கைகள் போன்ற ஆறு பிரிவுகளின் கீழ் அதற்கென நியமிக்கப்பட்ட செயல்பாட்டுக் குழுக்கள் தங்களின் கருத்து வரைவுகளை சமர்ப்பித்தன. அதனையொட்டி ஆழமான விவாதங்கள் நடைபெற்றன.

இக்கருத்தரங்கில் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தை சார்ந்த பிரதிநிதிகள், பல்வேறு மாநிலங்களை சார்ந்த சமூக வானொலி நிலையத்தை சார்ந்தவர்கள், சமூக வானொலி கூட்டமைப்பு பிரதிநிதிகள், திறன் மேம்பாட்டு நிறுவனங்கள், கல்வி நிறுவன பிரதிநிதிகள் மேலும் பலர் பங்கேற்றனர்.

நீண்ட கலந்துரையாடல் மற்றும் மிகவும் ஆழமான கருத்துப் பகிர்விற்கு பிறகு, பங்கேற்பாளர்கள், சமூக வனொலிகளை பலப்படுத்துவதற்காக கீழ்காணும் பரிந்துரைகளை அளித்துள்ளனர்.

## உள்ளடக்கம், சம பங்கு மற்றும் பன்முகத்தன்மை

☑ சமூக வானொலி நிலையங்கள் தகவல் அறியும் உரிமை சட்டம், உணவு பாதுகாப்பு, கல்வி, மாற்றுதிறனாளிகள் உரிமை போன்ற தளங்கள் இயங்கிவரும் பல்வேறு சமூக மேம்பாட்டு இயக்கங்களுடன் தங்களது தொடர்பை பலப்படுத்த வேண்டும். இச்சமூக இயக்கங்களுடனான தொடர்பின் மூலம் பல்வேறு சமூக பிரச்சனைகளையும், அவைக்குறித்தான பார்வைகளையும் பன்முக தன்மை கொண்ட சிந்தனைகளையும், சமூக வானொலிகளின் வழியே எடுத்துச் செல்ல வழிவகை செய்ய இயலும். இதன் மூலம் மக்களின் தகவல் தொடர்பு உரிமைகளை மீட்டெடுக்கவும், அவர்களின் பிரச்சனைகளை ஒருமித்த குரலில் ஒலிக்கவும், செயல் திறம் உள்ள குடிமக்களை உருவாக்கவும் இயலும்.

- ☑ சமூக வானொலிகள் தற்போது சமூகத்தில் நிலவும் புதிய கலாச்சார பன்முகத்தன்மையை ஆழ்ந்து கவனித்து, மக்களின் வாழ்வியல் முறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், சமூக சமன்பாடுகள், கலை மற்றும் கலாச்சார வெளிப்பாடுகள் போன்றவற்றை கூர்ந்து ஆராய்ந்து அதற்கேற்ப தங்களது செயல்பாடுகளை வடிவமைத்துக் கொள்ள வேண்டும்.
- ☑ சமூக வானொலிகள் தங்களுக்கான சமூகம் எது என்பதை தீர்மானிப்பதில் சில குழப்பங்கள் உள்ளன. சமூக வானொலியின் அனைத்து பங்கேற்பாளர்களும் இணைந்து, பன்முகத்தன்மையும் தொடர்ந்து மாறுதலுக்குள்ளாகிவரும் சமூகத்தை மிகவும் நுட்பமாக உணர்ந்தறிந்து தங்களுக்கான சமூகத்தை வரையறை செய்ய வேண்டும். மேலும், வானொலி நிலையங்கள் தங்களது சமுதாயத்தில் உள்ள அதிகார ஏற்றத்தாழ்வுகளை உணர்ந்தும், நிகழ்ச்சிகளில் அனைவரையும் சமமாக பங்கேற்கவிடாமல் தடுக்கும் காரணிகளை ஆராய்ந்தும், கவனத்துடன் செயல்பட வேண்டும்.
- ☑ பாலினச் சமநோக்கு பற்றிய AMARC வழிகாட்டுதல் மற்றும் அது தொடர்புடைய ஆவணங்களை, அடிப்படையாகக் கொண்டு அனைத்து சமூக வானொலி திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். அதன் வழியே சமூக வானொலி பணியாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் சமூக வானொலி மேலாண்மையிலுள்ள அனைவருக்கும் பாலினச் சமநோக்கு பற்றிய புரிதலை சீர்செய்ய வேண்டும். சமூக வானொலிகள் தங்களது கொள்கைகள் மற்றும் நடத்தை விதிகளில் பாலினச் சமநோக்கு மற்றும் சமவாய்ப்பை வலியுறுத்தி பின்பற்ற வேண்டும்.
- ☑ ஊடக சேவைகள் குறைவான மற்றும் சண்டை சச்சரவுகளுக்கு இலக்காகும் பகுதிகளில், முன்யோசனையுடன் செயல்பட்டு சமூக வானொலிகளும் சமூக வானொலிக்கான உரிமங்களை அளித்து விளிம்பு நிலையில் உள்ள மக்கள் தங்கள் பிரச்சனைகளை ஜனநாயக ரீதியில் விவாதிக்கவும், தங்களின் வாழ்வாதாரப் பிரச்சனைகளை தீர்க்கவும் ஏதுவாக ஊடக வாய்ப்புகள் உறுதி செய்யப்பட வேண்டும்.
- ☑ பேரிடர் போன்ற சமயங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை, பேரிடர் நிவாரணம் போன்ற அவசரகால கட்டங்களில் உடனடி அவசரகால மற்றும் தற்காலிக சமூக வானொலி உரிமம் அளித்திட ஏதுவாக, சமூக வானொலிக்கான வழிகாட்டு கொள்கைளில் சிறப்பு விதிகள் இணைக்கப்பட வேண்டும்.
- ☑ அனைவரையும் உள்ளடக்கிய சமவாய்ப்பு மற்றும் பன்முகத்தன்மையை வளர்க்க ஏதுவாக கொள்கைகள், செயல்முறைகள் மற்றும் செயல் திட்டங்கள் வகுப்பதற்கு உதவும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள்,

கருத்துப்பட்டறைகள் ஒருங்கிணைக்க அரசாங்கம் உதவி செய்திட வேண்டும்.

## திறன் மேம்பாடு

- ☑ மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், பல்வேறு துறைகளில் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை அளிக்கவல்ல நிறுவனங்களை ஒருங்கிணைத்து சமூக வானொலிகளுக்கான ஓர் திறன் மேம்பாட்டு கூட்டமைப்பை நிறுவ வேண்டும்.
- ☑ திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் நிறுவனங்களை பட்டியலிட்டு தொகுக்க வேண்டும்.
- ☑ திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் வல்லுனர்கள் மற்றும் ஆலோசகர்கள், திறன்மேம்பாட்டு வசதிகள் பற்றிய தகவல்களை திரட்டி தொகுக்க வேண்டும்.
- ☑ அந்தந்த நிறுவனங்கள், மண்டலங்கள், மொழிகள் அடிப்படையில் தேவையான பயிற்சி திட்ட நாட்காட்டியை உருவாக்க வேண்டும்.
- ☑ செம்கா (CEMCA), யுனிசெஃப் (UNICEF), யுனெஸ்கோ (UNESCO) மற்றும் பிற நிதி அளிக்கும் நிறுவனங்கள் தங்களது ஆர்வம், முன்னுரிமை மற்றும் நிதி ஒதுக்கீடு தகவல்களை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை மற்றும் திறன் மேம்பாட்டு கூட்டமைப்பு நிறுவனங்களுக்கும் தெரிவிப்பதன் மூலம் திறன் மேம்பாட்டு முயற்சிகளை பலப்படுத்த இயலும்.
- ☑ திறன் மேம்பாட்டு முயற்சிகளில் பல்துறை வல்லுநர்களை ஈடுபடுத்த வேண்டும், உதாரணமாக பாலினம், சுற்றுச்சூழல், சுகாதாரம் சார்ந்த பல்துறை வல்லுநர்களை, நாடகம், கிராமியக் கலைகள் போன்ற பல்வேறு ஊடகத்துறை நிபுணர்களைகளையும் உள்ளடக்கிய பயிற்சி களத்தை உருவாக்க வேண்டும்.
- ☑ பயிற்சி கையேடுகள், வழிகாட்டிகளை தொகுத்து அனைவரும் பயன்பெறம் வகையில் பொதுவெளியில் வெளியிடச் செய்ய வேண்டும். அவ்வாறு பிற நிறுவனங்களின் பயிற்சி கையேடுகளை கையாளும் போது, மொழிபெயர்ப்பு உரிமை, பயன்படுத்தும் உரிமை போன்றவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்.
- ☑ களத்தில் செயல்படும் செயற்பாட்டாளர்கள் மற்றும் நிறுவனங்கள் இணைந்து பயிற்சிகளுக்கான ஓர் பொதுவான குறைந்தபட்ச பயிற்சி திட்டத்தையும், பயிற்சி தேவைகளையும் வரையறுக்க வேண்டும்.
- ☑ செயல்பாட்டில் இருக்கும் சமூக வானொலி நிலையங்கள், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் மற்றும் பிற நிறுவனங்கள் அளிக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளுக்காக காத்திருக்காமல் தங்களின் தேவைக்கேற்ப

பயிற்சிகளை உள்ளூரிலேயே வடிவமைத்து அளிக்க வேண்டும். திறன் மேம்பாட்டை ஓரு கலாச்சாரமாக பாவித்து செயல்பட வேண்டும்.

- ☑ அந்தந்த மாநிலங்களின் செயல்படும் சமூக வானொலி நிலையங்கள், மாநில அளவில் மற்றும் மொழி அடிப்படையில் தலைமை பயிற்சியாளர்களை தங்களுக்குள்ளேயே உருவாக்கி உடனுக்குடன் தங்களுக்கிடையே பயிற்சிகளை அளிப்பதன் மூலம், செலவு குறைவான பயிற்சிகளை அளிக்க இயலும்.
- ☑ பயிற்சியில் பங்கு பெறும் ஓவ்வொரு சமூக வானொலி நிலைய பங்கேற்பாளர்களும், தங்களது கற்றலை தங்களது நிலைய பிற பணியாளர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும் சமுதாய பங்கேற்பாளர்களுக்கும் பகிர்ந்து கொள்ளும் கலாச்சாரத்தையும் உருவாக்க வேண்டும்.
- ☑ பயிற்சிகளுக்கு பிறகு தலைமைத்துவம் மற்றும் முடிவுகளை எடுக்கும் திறனை அதிகரிக்கும் வகையில் வழிகாட்டுதல்கள் இருத்தல் வேண்டும்.

## நிலைப்புத்தன்மை

- ☑ சமூக வானொலியின் நிலைப்புத் தன்மை பற்றிய பிரத்யேக கலந்துரையாடல்களை ஒருங்கிணைக்க வேண்டும். உலக, தேசிய, மண்டல, மாநில அளவில், நிலைப்புத்தன்மை தொடர்பான சிறந்த நடைமுறைகள் மற்றும் புதிய முயற்சிகளை ஆவணப்படுத்தி, மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- ☑ தங்களது தாய் நிறுவனங்களிடமிருந்து, தனித்துனின்று சுய அடையாளத்துடன் சுதந்திரமாக செயல்படும் சமூக வானொலி நிலையங்களை அடையாளம் கண்டு, ஊக்குவிக்க ஏதுவாக சமூக வானொலிகளுக்கான ஒழுங்குமுறை விதிகளில் மாற்றங்கள் செய்ய வேண்டும்.
- ☑ சமூக வானொலிகளின் உரிமை மற்றும் மேலாண்மையில் மக்கள் பங்கேற்பு என்பது உரிமம் பெற்ற நாளிலிருந்தே தொடங்கி செயல்பட ஏதுவாக செயல்பாடுகளை வடிவமைக்க வேண்டும். பின்னாளில் மக்களிடம் ஒப்படைப்பது என்பது எவ்விதத்திலும் பலனளிக்காது.
- ☑ சமூக வானொலிகளை ஓர் வளர்ச்சி சாதனமாக மட்டும் பார்த்தல் என்ற நிலையிலிருந்து, இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவு (19)(1)(அ) இல் குறிப்பிட்டுள்ளபடி மக்களின் பேச்சு மற்றும் வெளிப்பாட்டிற்கான உரிமையை செயல்பாட்டிற்கு கொண்டுவரும் சாதனமாக சமூக வானொலிகளை மறுபார்வைக்கு உட்படுத்த வேண்டும்.
- ☑ குறிப்பாக, சரியான கால இடைவெளியில், சமூக வானொலிக்கான சமூக தணிக்கைகளை மேற்கொள்ளவும், அதற்காக திறன் வளர்க்கும்

பயிற்சிகளை சமுதாய வானொலி தொடங்கும் காலத்திலிருந்தே வழங்க வேண்டும்.

- ☑ சமூக வானொலிகளின் நிகழ்ச்சிகளுக்கான விதிமுறைகளை சற்று தளர்த்துதல் அவசியம். இலவசமாக உள்ளூர் செய்திகளை சேகரித்து ஒலிபரப்ப அனுமதி அளித்தல் சாலச்சிறந்தது.

- ☑ ‘‘நிலைப்புத் தன்மையை மையமாக கொண்டு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வடிவமைத்து வழங்கிட வாய்ப்பாக பயிற்சி நிறுவனங்களின் கூட்டமைப்பை கட்டமைத்தல் அவசியம். நிலைப்புத் தன்மையை அடைவதற்காக புதிய புதிய முயற்சிகளை பயிற்சிகளின் ஓரு அங்கமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

- ☑ தொழில்நுட்பங்களின் நிலைப்புத் தன்மையும், பயிற்சிகளில் ஓர் பகுதியாக இருக்குமாறு திறன் மேம்பாட்டிற்கான பயிற்சிகளை வடிவமைக்க வேண்டும்.

- ☑ சமூக வானொலிகள் தங்களது அடிப்படை செயல்பாடுகளுக்கான செலவுகளை ஈடுகட்டும் விதமாக ஓர் முதன்மை நிதியை உருவாக்கி உதவி செய்யும் போது, வானொலிகள் நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்கான முயற்சிகளில் முழுமையாக ஈடுபடுவர்.

- ☑ DAVP விளம்பரங்களுக்கான கட்டணங்களை உடனுக்குடன் பெற ஏதுவான வகையில் ஒழுங்குமுறைகளை கொண்டுவருதல் அவசியம். மேலும், அரசு மற்றும் அரசு சார்ந்த அமைப்புக்களின் மூலம் பெறப்படும் விளம்பர வருவாயில் கட்டுப்பாடுகளை கொண்டு வருவதன் மூலம் சமூக வானொலிகளின் சுதந்திரமும் நிதி ஆதரங்களின் பன்முகத் தன்மையும் உறுதிப்படும்.

- ☑ சிறந்த முயற்சிகளை பகிர்ந்து கொள்ள, பிற வானொலி நிலையங்களுக்கு நேரடியான சென்று களப்பார்வையிடல் மற்றும் இணையத்தின் வழியே பகிர்ந்து கொள்ளுதல் முறைகளை செயல்படுத்த வழிவகைகள் செய்ய வேண்டும்.

- ☑ மக்கள் தங்களுக்கான உரிமையை நன்குணர்ந்து நிர்வகிக்க ஏதுவாக சமுதாய வானொலியை மக்களிடம் ஒப்படைக்கும் எளிய வழிமுறையை வடிவமைக்க வேண்டும்.

- ☑ சமுதாய வானொலி உதவி நிதியை, ஓர் தனி அதிகாரமிக்க நிதியாக மாற்றி அமைக்க வேண்டும், அதில் பிற பங்கேற்பாளர்களின் பங்கேற்பும் இருத்தல் வேண்டும். அது போல் உள்ளூர் தொழில்நுட்பங்களை ஊக்குவிப்பதற்காகவும் மற்றும் செலவுகளும், வரிகளும் குறைக்கப்பட ஏதுவாக ஒழுங்குமுறை விதிகளை மாற்றியமைக்க வேண்டும்.

- ☑ சமுதாய வானொலி கொள்கைகளுக்கு சவாலாக இருக்கும் இறுக்கங்களை குறைக்க வேண்டும், பிற மத்தியதுறைகளில் குறிப்பாக

உள்துறை மற்றும் தகவல் தொழில்நுட்ப துறை போன்றவற்றுடன் இணைந்து சமூக வானொலிக்கு சுமூகமான சூழலை உருவாக்கவும், FCRA 2010ல் உள்ளதைப் போன்று சமூக வானொலி கொள்கைகளுக்கு பாதகமாக உள்ள விதிமுறைகளை தளர்த்தி இலகுவான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

## தொழில்நுட்பம்

- ☑ SACFA மற்றும் அலைவரிசை ஒதுக்கிடுவதற்கான உரிமம் பெறுவதில் உள்ள நடைமுறைகளை எளிமைபடுத்தி காலதாமதத்தை உடனடியாக குறைக்க வேண்டும்.
- ☑ SACFA மற்றும் அலைவரிசை ஒதுக்கிடுவதற்கான உரிமம் பெறுவதில் உள்ள பிரச்சனைகளை சரிசெய்ய ஓர் பிரத்யேக உதவி மையத்தை ஏற்படுத்த வேண்டும்.
- ☑ கிராமங்களுக்கும், நகரங்களுக்குமான அலைவரிசை ஒதுக்கீடு முறைகளில் எவ்வித பாகுபாடுமின்றி சமூக நீதியும் பாதிக்கப்படாத அளவில் முறைபடுத்தப்பட்ட ஒழுங்குமுறைகளை பின்பற்றபட வேண்டும். அதற்கு ஏதுவாக முறையான பாகுபாடற்ற அலைவரிசை நிலவரைபடம் (MAPPING) தயாரிக்கும் முறையை அறிமுகப்படுத்த வேண்டும்.
- ☑ 20 வாட்டிற்கும் குறைவான ஒலிபரப்பும் உரிமைகளை எளியமுறையில் பெறவும் அல்லது உரிமங்களின்றி ஒலிபரப்பு செய்ய ஏதுவாக விதிகள் தளர்த்தப்பட வேண்டும்.
- ☑ சமுதாய வானொலி ‘‘உதவி நிதி’’யின் உதவியுடன், தொழில்நுட்பங்கள் பற்றிய பிரத்யேக பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.
- ☑ மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை, தொழில்நுட்பங்களை புதுப்பிப்பதற்கான முயற்சிகளுக்கு முன்னர் வழங்கி வந்த ‘‘தொழில்நுட்ப உதவிநிதி’’யை தற்போது நிறுத்தி வைத்துள்ளது, அதனை மறுபடியும் செயல்படுத்த வேண்டும்.
- ☑ மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை மற்றும் தகவல் தொழில்நுட்ப துறையும் இணைந்து, உரிய துறைகளுடன் கலந்து பேசி, சமுதாய வானொலி தொழில்நுட்ப டிரான்ஸ்மிடர் மற்றும் உபகரணங்களுக்கான இறக்குமதி சுங்கவரியை உடனடியாக நீக்க வேண்டும். அதுவே மிக குறைந்த செலவில் உயரிய தொழில்நுட்பத்துடன் சமுதாய வானொலி நிலையங்கள் நிறுவ வழிவகை செய்யும்.
- ☑ 250 ERP வாட் வகையிலான அதிக அளவிலான ஒலிபரப்பும் உரிமம் எத்தகைய சூழலில் தரப்படும் என்பதை மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு துறை தெளிவுபடுத்த வேண்டும். அத்தகைய சூழலை மிககவனமாக பரிசீலித்து, நகர்புறங்களில் நிலவும் அலைக்கற்றை பற்றாக்குறையையும்,

கிராமப்புறங்களில் போதுமான அளவு பயன்படுத்தப்படாமல் உள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

- ☑ தெரழில்நுட்பங்களுக்கான நிதி உதவிகள் செய்யும் போது, பரிந்துரைக்கப்படும் தரமதிப்பீடுகள் மிகக்கடுமையாக உள்ளன. மிக வேகமாக தொழில்நுட்ப உபகரணங்கள் மேம்படுத்தப்பட்டு மாறிவரும் நிலையில், இதனை கவனத்திற்கொண்டே தர நிர்ணயங்கள் உருவாக்கப்பட வேண்டும்.
- ☑ இணைந்து செயல்பட முன்வரும் சமுதாய வானொலி நிலையங்களுக்கு உரிய மானியங்களும் வழங்கப்பட வேண்டும்
- ☑ புதிது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுவரும் தொழில்நுட்பங்களாலும் மக்களுடன் இணைந்து செயல்படுவதில் பிரச்சனைகள் வருகின்றன். மக்கள் எத்தனை பேர் பங்கு பெற்றனர் என்பதை விட, எவ்வளவு எளிதாக, எவ்வளவு ஆழமாக பங்கேற்றனர் என்பதைக் கருத வேண்டும்.
- ☑ சமுதாய வானொலி செயல்பாடுகளை டிஜிட்டல் மயமாக்க முழுமையான கலந்துரையாடலுக்கு பின்புதான் முயற்சிக்கப்பட வேண்டும். பிற நாடுகளிலிருந்து புதிய தொழில்நுட்பங்களை கற்று, அதன் அடிப்படையில் சமுதாய வானொலி துறையில் புதிய கொள்கைகளை வகுக்கும் போது, அதற்குரிய கால அளவு சரியாக வரையறுக்கப்பட வேண்டும்.

## ஆராய்ச்சி, ஆவணப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு

- ☑ சமுதாய வானொலி நிலையங்களுக்கிடையேயான அனுபவ பகிர்வு களப்பார்வையிடல் மற்றும் கிடைமட்ட அளவிலான கற்றலை ஊக்குவிக்கும் போது, உரிய செயல்வடிவங்களை வகுக்க வேண்டும். தற்போது உள்ள முறைகளை ஒழுங்குப்படுத்தவும், பலப்படுத்தவும் வேண்டும்.
- ☑ சமுதாய வானொலி நிலையங்களின் ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்தும் திறன்களை வளர்க்கத் தேவையான திறன்மேம்பாட்டு பயிற்சிகளுக்கு உடனடியாக செயல்வடிவம் அளிக்கப்பட வேண்டும்.
- ☑ இத்துறையானது, சமுதாய வானொலிகளுக்கான கூட்டமைப்பை பலப்படுத்துவதை நோக்கி செயல்பட வேண்டும், இக்கூட்டமைப்பானது உரிய நெறிமுறைகளை பின்பற்றவும் சமரசம் இல்லாத கொள்கைகளை மையமாகக் கொண்டும் செயல்பட வேண்டும்.
- ☑ இத்துறையில் சுய ஆய்வு மற்றும் சக வானொலிகளுடன் இணைந்து ஆய்வு செய்தல் போன்ற நெறிமுறைகளை ஊக்கப்படுத்த வேண்டும். அதுவே இணைந்து கற்றல் மற்றும் தொடர் முயற்சிகளை உறுதிசெய்யும்.

- ☑ அரசாங்கம் சமுதாய வானொலி துறையில் ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்துதலுக்கு உதவி செய்ய வேண்டும். அத்தகைய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் போது, அதன் கண்டுபிடிப்புகளை, அனைத்து பங்கேற்பாளர்களிடத்திலும் வெளிப்படையாக பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- ☑ சமுதாய வானொலி துறையில் ஆராய்ச்சி, மதிப்பீடு என்ற முறைகள் பிற ஊடகங்களின் ஆராய்ச்சி மற்றும் மதிப்பீடு முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்க வேண்டும். இது மக்கள் பங்கேற்பு கொள்கைகள், சமுதாய வானொலியின் தத்துவங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
- ☑ ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்தல் முறைகளில் சீரிய செயல்முறைகளை வடிவமைத்து அதன் மூலம் சமுதாய வானொலி துறையில் கொள்கை ரீதியான மாற்றங்கள் ஏற்படவும் இத்துறையின் வளர்ச்சிக்கு உதவிகரமாகவும் இருக்க வேண்டும்.

## சமுதாய வானொலி கொள்கைகள் — உரிமம் வழங்குதல்

- ☑ சமுதாய வானொலிக்கான உரிமம் வழங்குதல் மேலும் விரிவாக்கப்பட வேண்டும். கூட்டுறவு சங்கங்கள், அரசியலுக்கு அப்பாற்பட்ட தொழிலாளர் கூட்டமைப்புகள், மக்களின் சேவைக்கு முழுமையாக அர்பணித்தவர்களுக்கும் உரிமங்கள் வழங்கப்பட வேண்டும்.
- ☑ சமுதாய வானொலிகளின் உண்மையான தத்துவத்தை கருத்தில் கொண்டு, பொதுத்துறை கல்வி நிறுவனங்கள் தவிர்த்து, பிற அரசு நிறுவனங்களுக்கும், துறைகளுக்கும் உரிமம் அளிக்கக்கூடாது. சமுதாய வானொலி நிலையங்கள் என்பது முழுமையாக மக்கள் அமைப்புகளாலே நடத்தப்பட வேண்டும்.
- ☑ புவியியல் மற்றும் நிலப்பகுதி வேறுபாடுகள் மற்றும் தேவையை கருத்தில் கொண்டு, சில குறிப்பிட்ட நிலபரப்பு பகுதிகளில் ஒரு ஒரு சூழலுக்கும் ஏற்றுவாறு 100 வாட்க்கும் மிகையான சக்தியுடைய ஒலிபரப்புகளுக்கு உரிமங்கள் அளிக்கப்படலாம்.
- ☑ ஒருங்கிணைந்த ஒற்றைச் சாளர முறைப்படி எளிய முறையில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு உரிமங்கள் வழங்கப்பட வேண்டும்.
- ☑ இதுவரை செயல்படும்—சமுதாய வானொலி நிலையங்கள் இல்லாத மாநிலங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, உரிமங்கள் வழங்கப்பட வேண்டும்.
- ☑ அவசர கால மற்றும் பேரிடர் நேரங்களில் உடனடியாக சமுதாய வானொலி நிலையங்கள் நிறுவதற்கு தேவையான தேசிய அளவிலான ஓர் அலைவரிசை ஒதுக்கப்பட வேண்டும். பேரிடர் பாதிக்கும்

பகுதிகளிலிருந்து வரும் உரிம விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும்.

☑ சமுதாய வானொலி நிலையங்களின் விண்ணப்பங்களை ஆய்வு செய்யும் ஆணையத்தை நிறுவும் போது, வெளிப்படைத்தன்மை முறையை பின்பற்றப்பட வேண்டும் நியாயமான பிரதிநிதித்துவத்துடனும், ஜனநாயக முறையிலும் அனைத்து தரப்பினையும் நிறுவ வேண்டும். மறுக்கப்பட்ட சமுதாய வானொலி நிலையங்களுக்கான காரணங்களும் வெளிப்படையாக பொதுத் தளத்தில் வெளியிடப்பட வேண்டும்.

## நிகழ்ச்சிகள்

☑ உலக அளவிலான நியதிகளை கருத்தில் கொண்டு, சமுதாய வானொலி நிலையங்களுக்கு உள்ளூர் செய்திகளை ஒலிபரப்பும் உரிமைகள் வழங்கப்படவேண்டும். அதற்கேற்றாற் போல் FCRA நியதிகளையும் திருத்தியமைக்க முன்வரவேண்டும்.

☑ உள்ளூர் கலாச்சார வளங்கள், சமுதாய வானொலி நிலையங்களில் ஒலிபரப்பப்படுவதன் வழியாக மக்கள் வணிக ரீதியாக சுரண்டல்களுக்கு ஆளாகாமல் இருக்கவும், அதே சமயம், உள்ளூர் கலாச்சார நிகழ்ச்சிகள், சமுதாய வானொலிகளில் ஒலிப்பரப்பபடுவதை உறுதிபடுத்தவும், அறிவுசார் சொத்து உரிமை கொள்கைகளில், தேவைப்படும் மாற்றங்களை செய்ய வேண்டும்.

## நிதி உதவி மற்றும் கண்காணிப்பு

☑ சமுதாய வானொலி நிலையங்களின் நிகழ்ச்சி வழிகாட்டி விதிமீறல்களை கண்காணிக்க தேவைப்படும் நடவடிக்கைகளை எடுக்க ஓர் சுயமான ஒழுங்குமுறை அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

☑ சமுதாய வானொலி நிலையங்களுக்கான பொதுதுறை நிதி உதவிகளை வழங்கும் முறையை மறுகருத்தாய்வு செய்து, நிதி அளிக்கும் தீரமானங்களை சுயமாக எடுக்கும் ஓர் தன்னாட்சிப் பெற்ற பொது அமைப்பை உருவாக்கப்பட வேண்டும்.

☑ அரசு விளம்பரங்கள் மற்றும் நிதி உதவி அளிக்கும் முறையில் வெளிப்படைத் தன்மை பின்பற்றப்பட வேண்டும்.

☑ டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் வழியே ஒவ்வொரு சமுதாய வானொலி நிலையங்களுக்கும் அகண்ட அலைவரிசை இணைய சேவையை (BBNL) அளிக்கப்பட வேண்டும். அதன் வழியே அரசாங்கமும் சமுதாய வானொலிகளின் ஒலிபரப்புகளை கண்காணிக்க முடியும்.

☑ டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் அடிப்படையில் சமுதாய வானொலி நிலையங்கள் இணையத்தின் வழியே நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கான கட்டணத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும்.

## அலைவரிசை மற்றும் தொழில்நுட்பம்

☑ சமுதாய வானொலிக்கான டிரான்ஸ்மிட்டர்கள் மற்றும் இதர உபகரணங்களுக்கான இறக்குமதி சுங்கவரி, மற்றும் இதர வரிகளை உடனடியாக நீக்க வேண்டும்.

☑ 20 வாட்டிற்கும் குறைவான ஒலிபரப்பும் உரிமைகளை உரிமங்களுக்கான வரம்பிற்குள் கொண்டுவராமலும் அல்லது குறைந்தபட்ச உரிமம் வழங்கி அனுமதிக்க வேண்டும்.

☑ டிஜிட்டல் மயமான ஒலிபரப்பு முறைக்கு மாறும் போது மிகவும் கவனத்துடன் செயல்பட வேண்டும்.

☑ தேசிய அளவில் செயல்படும் அலைவரிசைகளுக்கான நிலவரைபடம் (MAP) தயாரித்து அதனை பொதுவெளியில் வைப்பதன் மூலம் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும், சமமாக கிடைப்பதை உறுதிசெய்யவும், அதற்கான முயற்சிகளை எடுக்கவும், உதவிகரமாக அமையும்.